பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 21 ஞாயிற்றுக்கிழமை 04.02.2024 கதிர் 89

### இலங்கையின் சுதந்திர நாளான இன்று

# தெற்கில் கொண்டாட்டம் வடக்கு கிழக்கில் கரிநாள்

### தமிழர்கள் எதிர்ப்புப் பேரணிகளுக்கும் திட்டம்

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் இன்று தெற்கில் கொண்டாடப்படுகின்றநிலையில் அதனைக்கரிநாளாகப்பிரகடனப் படுத்தி வடக்கு, கிழக்கில் இரு வேறு அமைதிவழிப் பேரணிகளுக்குஅழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து கந்தசுவாமி ஆலயம் வரையில்பேரணிஇடம்பெற ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அமைச்சர்கெஹலியரம்புக்வெல கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வழக்கமாக இதுபோன்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் யாராவது கைது செய்யப்பட்டால் அந்த வழக்கினை பார்வையிடுவதற்கும் சம்பந்தப்பட்டவருக்கு தமது தார்மீக ஆதரவைத் தெரிவிப்பதற்கு அமைச்சர்கள் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் திரள்வார்கள். அவர் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர்கூட ஓடிச் சென்று அவரைப் பார்ப்பதற்கு ஒரு ஆளும் தரப்பு உறுப்பினர்கூட இருக்கவில்லை.

பாவம் அவர் தனியாளாகத்தான் நீதிமன்றம் சென்றார் அங்கிருந்து சிறைக்கும் சென்றார். சிறைக்குச் சென்றதும் வைத்தி ☞ 2

## 600 சிறைக் கைதிகளுக்கு இன்று பொது மன்னிப்பு

76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுமார் 600 பேருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாகசிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடுமையான குற்றங்களை புரிந்தோர்ஜனாதிபதிபொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட மாட்டார்கள். அவ்விதமானவர்களின் பெயர்கள் பட்டியலில் இல்லை. ☞ 8

## சுதந்திர நாள் போராட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

இலங்கையின் 76வதுசுதந்திரதினத்திற்கு எதிராகயாழ்ப்பாணத்தில் போராட்டங்களுக்குத் தடைவிதிக்கநீதிமன்றம் மறுத்துவிட்டது. போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதிப் பொலிஸார் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தடையுத்தரவை பெற முயற்சித்தனர். நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலருக்கு எதிராகவே போராட்டம் நடத்த தடை விதிக்க கோரிய மனுவை ஆராய்ந்த யாழ்ப்பாண நீதிவான் மன்ற பதில் நீதிவான் பா.தவபாலன் அதனை நிராகரித்தார்.

போராட்டம் நடத்துவதற்குபொதுமக்களுக்கு உரித்துண்டு,சுதந்திரதின நிகழ்வுகளுக்குஇடையூறு விளைவிக்காதவகையில் போராட்டங்களை நடத்தமுடியும்என ☞ 2

## பொதுச் சின்னத்தில் போட்டியிட முன்வந்தால் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்வதற்குத் தயார்

### எந்த விட்டுக்கொடுப்போடும் முன்வருவோம் என்கிறது ரெலோ

ஒருபொதுச்சின்னத்தின் கீழ் போட்டியிட தமிழ்அரசுக்கட்சிதயார் என்றால் அதனோடு கூட்டுச் சேர்வதற்கு எந்தவிட்டுக்கொடுப்புக்கும் தயார், தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னமேகூட அந்த பொதுச் சின்னமாக இருக்கலாம் என்று ரெலோ அமைப்பின் தலைவர்செல்வம்அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நாம்தொடக்கத்திலிருந்து செயற்பட்டு வருகின்றோம். இதற்காக பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளோம்.

ஏற்கனவே நாங்கள் தமிழரசுக்கட்சியின்தனிச் சின்னத்தில் நாங்கள் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றபெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சிமன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிடவேண்டும்என்றுஅவர்கள் ☞ 10

## மக்கள் விரும்பினும் விரும்பாவிடினும் அர்ப்பணிப்போடு சேவையாற்றுவோம்

### மக்கள் சக்தித் தலைவர் அனுர உருக்கம்

மக்கள்எம்மைவிரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களுக்காக எப்போதும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவோம் என்று தேசிய மக்கள்சக்தியின்தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற மக்கள்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

தற்போது எம் முன்னே இரண்டு பாதைகள் உள்ளன. ஒருபாதை நாம் நன்கு அறிந்த பாதை. அதில் பயணித்தால் நிச்சயம் படுகுழிக்குள்தான் செல்வோம்.இரண்டாவது புதிய பாதை. அந்தப் பாதையில் பயணித்தால் ஒன்றாக எழுந்து நிற்க முடியும். ☞ 2

## சாந்தன் இலங்கைக்கு திரும்புவதை மனிதாபிமானத்தோடு அணுகுங்கள்

### ரணிலிடம் சிறீதரன், மனோ வலியுறுத்து

ராஜிவ்கொலைவழக்கில் குற்றத் தண்டனை முடித்து விடுதலை பெற்றுள்ளசாந்தன்இலங்கைக்கு திரும்புவதற்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் இலங்கை தமிழரசு கட்சி தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறப்பினருமான சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழ் முற்போக்குகூட்டணிதலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் ஆகியோர் நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கையை சாதகமாக ☞ 2

## மாத்தறையில் தனித்துவ இசை விழா நேற்று தொடக்கம்; இன்றும் நடக்கும்

இலங்கை மற்றும் சர்வதேச நடைமுறை கலை - இசையை மையப்படுத்திய கலை விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்றுத் தொடங்கியது.

பொருளாதாரமற்றும் சமூகமறுமலர்ச்சிக்கான கலாச்சார சமூகத்தின் ஒத்துழைப்புடன் கலை அமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட இந்த கலை விழா இன்று இலங்கையின் சுதந்திரதினத்திலும்மாத்தறை கோட்டையில் நடைபெறுகிறது.

மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் குடும்ப உறுப்பினர்களான ஜயந்தி சமரவீர, சஞ்சல குணவர்தன மற்றும் பேராசிரியர் ஜகத் வீரசிங்கஉள்ளிட்டோரின் 'மாத்தறை பிரீடம் ஹப்' அமைப்பினால் இந்த நிகழ்வு ஏற்பாடு ☞ 10

## ரணில் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகுவதில் குறையில்லை

### பெரமுன எம்.பி. குட்டியாராச்சி தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் நாட்டை சரியான பாதையில் வழிநடத்துகிறார். எனவே அவர் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராவதில் எந்தக் குறைபாடும் இல்லை என்று பொது ஜன பெரமுவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாரய்ச்சி தெரிவித்தார்.

அநுராதபுரம் நகரத்துக்கு நேற்றுச் சென்றிருந்தஅவர்அங்கு செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர்அங்குமேலும் ☞ 10

## இலங்கை – தாய்லாந்து இடையே நேற்று சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

### இரு நாட்டு தலைவர்கள் முன் கைச்சாத்து



இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது. இந்த நிகழ்வுஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க மற்றும் தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் முன்னிலையில் ☞ 8

### நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்

## சிறைக்குச் சென்ற சிலமணி நேரத்திலேயே அமைச்சர் கெஹலிய மருத்துவமனையில்

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்லவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை அடுத்துசிறையில்அடைக்கப்பட்ட அமைச்சர் சில மணி நேரங்களிலேயே சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கெஹெலியரம்புக்வெல்ல மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று பிற்பகல் பிற்பகுத்ததப் பட்டதையடுத்து, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அமைச்சர் கெஹெலியரம்புக்வெல்ல ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யசாலைக்குச் சென்றுவிட்டார் என்பது வேறுவிடயம். ஆனால் அவருக்கு ஆதரவளிக்க யாரும் இருக்கவில்லை. ஏன், அவரது கைது தொடர்பில் பேசுவதற்குக்கூட ஆளும்தரப்பில் ஒருத்தரும் இல்லை என்பதுதான் உண்மை நிலை.

மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அவருக்கு ஆதரவாக 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தார்கள். அவர்களில் ஒருவர்கூட அவர் கைது செய்யப்பட்டபோது அவருக்கு ஆதரவாக நிற்பதற்கு முன்வரவில்லை. கடைசியில் கைவிடப்பட்டுவிட்டார் அவர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுனவினர் தன்னை ஆதரிக்காமல் வேறு ஏதாவது முடிவுகள் எடுத்தால் ராஜபக்சக்கள் உட்பட பெரமுனவின் அரசியல்வாதிகளுக்கு எதிராக இதுபோன்ற நடவடிக்கைகள் பாயும் என்ற எச்சரிக்கையை வழங்குவதற்காக கெஹலியவின் கைது நடவடிக்கையை ரணில் ஆதரித்தாரோ என்கிற கோணத்திலும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கதைகள் அடிபடுகின்றன. ஏனெனில் கெஹலியவின் கைதும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் ரணிலுடன் தனித்துப் பேச வேண்டியிருக்கிறது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் இறங்கி வருவதும் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இதற்கு முன்னர் பெரமுன தனியாக வேட்பாளரை நிறுத்தும், அவர் நான்கு எழுத்துக்கள் கொண்ட வேட்பாளராக இருப்பார் என்றெல்லாம் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தவர் பெரமுனவின் செயலாளர்.

....................

இன்று வடக்கு கிழக்கில் கரிநாளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பேரணிகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றத் தடைகளைப் பெற யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. இன்று காலையிலும் வேறு சில நீதிமன்றங்களின் ஊடாகத் தடைகளைப் பெற பொலிஸார் முயற்சிப்பார்கள் என்று தெரிகின்றது. அவையும் தோல்வியில் -முடியும் பட்சத்தில், வீதிகளில் இறங்கி பேரணியாக நகர்வதற்கு முற்பட்டால் அவற்றைத் தடுத்து நிறுத்த தண்ணீர் புகைக்குண்டுகள், நீர்த்தாரைத் தாக்குதல்களை நடத்துவதற்கான முழுத் தயார்ப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தகவல் கிடைத்துள்ளது.

நின்ற இடத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை அனுமதித்தாலும் பேரணிகளை அனுமதிப்பதில்லை என்கிற முடிவில் பொலிஸ் மேலிடம் இருப்பதாக அறியமுடிகின்றது. கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியினரின் போராட்டத்தை அது தொடங்கிய 15ஆவது நிமிடமே தாக்குதல் நடத்திக் கலைத்தமை போன்ற சம்பங்கள் இன்று வடக்கு கிழக்கிலும் நடக்கலாம் என்ற எதிர்வுகூறப்படுகின்றது.

....................................

தமிழ் அரசுக் கட்சியின் ஒற்றுமைக்கான அழைப்புத் தொடர்பில் அதன் முன்னாள் பங்காளிக் கட்சிகளான ஈபிஆர் எல்எவ், புளொட், ரெலோ என்பன ஒவ்வொருவகையில் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன. இந்த மூன்று கட்சிகளுமே இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற ஒரு கூட்டின் கீழ் குத்துவிளக்கை பொதுச்சின்னமாக ஏற்றுக்கொண்டு இயங்கி வருகின்றன. கூட்டமைப்பு என்று இயங்கிய போது தமக்கு ஏற்பட்ட மோசமான அனுபவங்களின் வாயிலாக இந்தப் புதிய ஜனநாயகக் கூட்டணிக்கு என ஒரு யாப்பு, கட்டமைப்பு எல்லாம் இருக்கின்றன என்றும் தெரிவிக்கின்றன.

அப்படியானால் தமிழ் அரசுக் கட்சியின் அழைப்புத் தொடர்பில் ஜனநாயகக்கூட்டணித் தலைவர்கள் கூடியாராய்ந்து ஒரே பதிலைத் தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் இதுவரை அப்படி ஒரு பதில் வரவேயில்லை. அந்தக் கூட்டணியில் உள்ள மூன்று முக்கிய கட்சிகளின் தலைவர்களும் ஒவ்வொரு விதத்தில் சிறீதரனின் அழைப்புக்குப் பதில் தந்துள்ளார்கள்.

முதலில் பதில் தந்தவர் ஜனநாயகக்கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் அதன் பேச்சாளருமான ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன். தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த முன்னாள் கூட்டமைப்புக் கட்சிகள் உள்ளிட்ட 5 கட்சிகள் ஏற்கனவே ஜனநாயகக் கூட்டணி என்ற புதிய கூட்டாக இயங்கி வருவதால் தமிழ் அரசுக் கட்சி அதில் வந்து-சேர்ந்துகொள்ளலாம் என்று சுரேஸ் தெரிவித்திருந்தார். இரண்டாவதாகக் கருத்துத் தெரிவித்திருந்த புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சிக்குள் இருக்கும் பிளவுகளை முதலில் தீர்த்து கட்சியை ஒற்றுமைப்படுத்திவிட்டு பின்னர் கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றி சிறீதரன் யோசிக்கலாம் என்றார். மூன்றாவதாக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிட தமிழ் அரசு தயார் என்றால், அது வீட்டுச் சின்னமாக இருந்தால்கூட எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் தயார் என்று அறிவித்திருக்கிறார்.

ஒற்றுமைப்பட்ட கட்சிகளின் லட்சணமே இப்படி இருக்கையில் இவர்கள் எல்லோரும் மீண்டும் ஒற்றுமை என்று கூறிக்கொண்டு என்னென்னவெல்லாம் செய்யப்போகிறார்களோ என்று நினைக்கையில் பதற்றமும் அச்சமும் ஒருங்கே பற்றிக்கொள்கின்றது.

ஜனநாயகக் கூட்டணியில் இன்னும் தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன எஞ்சியுள்ளன. இனி அந்தத் தலைவர்களும் சிறீதரனின் அழைப்புத் தொடர்பில் என்னத்தைச் சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளதோடு, காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் பங்கேற்புடன் மட்டக்களப்பு கல்லடிப் பாலம் தொடக்கம் காந்தி பூங்கா வரையும் அமைதி வழியான போராட்டம் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், விடுத்துள்ள அறிவிப்பில் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாக ஒட்டுமொத்த மக்களும் பிரகடனப்படுத் வேண்டும், சிங்கள மக்களுக்கும் அது கரிநாள் என்பது பொருத்தமானதே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறுப்பினர்கள் சங்கத்தின் உறவினர்களின் பங்கேற்பில் அமைதிவழிப் பேரணி மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்தப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவரும் காணாமலாக்கப்பட்ட உறவுகள் தெரிவிக்கையில், 14 வருடங்களாக எங்களது போராட்டங்களை தொடர்ந்து எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம். எத்தனை ஜனாதிபதிகள் மாறிமாறி வந்தாலும் எத்தனை பிரதமர்கள் மாறி மாறி வந்தாலும் எங்களுக்கான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. நாங்கள் தொலைத்து விட்டு தேடிக் கொண்டிருப்பது எமது உயிர்களை. ஒவ்வொரு உயிர்களையும் தொலைத்த நாங்கள் இன்றுவரை வீதியில் நின்று 220க்கும் மேற்பட்ட தாய், தந்தையர்களையும் இழந்து நிற்கின்றோம் என்றார்.

இதேவேளை, இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்கேஸ்வரன், மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய தரப்பிரும் ஆதரவினை வெளிப்படுத்தவதாக அறிவித்துள்ளதோடு சமயத் தலைவர்களும் போராட்டத்திற்குத் தமது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம், பிரித்தானியாவிலும் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிராக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதோடு ஆயிரக்கணக்கானவர்களை அதில் திரட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் 76ஆவது சுதந்திரதினம் இன்று காலி முகத்திடலில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் நேற்றே பூர்த்தி செய்துகொள்ளப்பட்டன.

புதிய நாட்டினை உருவாக்கவோம் எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ள சுதந்திரதின விழாவின் பிரதம அதிதியாக தாய்லாந்துப் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

சுதந்திர தின விழா அணிவகுப்பில் முப்படையினரும் பங்கேற்கவுள்ளதோடு மாணவர் படையினரும் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் 3461 தரைப் படையினர் அணிவகுப்பில் பங்கேற்கவுள்ளனர். கடற்படையினர் 1009 பேரும் விமானப்படையினர் 784 பேரும் அணிவகுப்பு நிகழ்வுகளில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

கொண்டாட்டங்களையொட்டி கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, கொள்ளுப்பிட்டிச் சந்தியில் இருந்து காலிமுகத்திடல் வரையில் பாதைகள் மூடப்பட்டு, பதில் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சாந்தன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசலித்து, சாந்தன் நாட்டுக்கு வருகை தந்து தன் வயதான தாயாரை சந்திக்கும் வாய்ப்பை வழங்குவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இரு கட்சிகளின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றையதினம் பெஜட் வீதி அலுவலகத்தில் நேற்று சந்திப்பு நடைபெற்றபோதே அவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பு தொடர்பில் மேலும் தெரியவருதாவது:

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியின் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சாந்தன் சுகவீனமுற்ற நிலையில் இருக்கும் நிலையில் அவர் நாட்டுக்குள் வருகை தந்து தனது வயதான தயாருடன் எஞ்சியகாலத்தினை பகிர்ந்துகொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்குங்கள் என்று இரண்டு தலைவரும் கோரினார்கள்.

அத்துடன், 77 வயதாகும் சாந்தனின் தாயாரான மகேஸ்வரி 32வருடங்களாக தனது மகனை பார்க்காது இருப்பதாகவும், அவருடைய சுகவீனத்தை அடுத்து அவரை தனது அருகில் வைத்துப் பார்த்துக்கொள்வதற்கு விரும்புகிறார் எனவும் விடுத்துள்ள கோரிக்கையையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

இதன்போது சாந்தனின் தாயாரின் கோரிக்கைக் கடிதம் மற்றும் மேலதிக தகவல்களை தருமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தமிழரசு கட்சி தலைவர் சிறிதரனிடத்தில் கோரியதோடு குறித்த விடயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகலரட்னாயக்கவுக்கு, இரு தலைவர்களுக்கும் முன்னிலையில் ஜனாதிபதி பணிப்பரை விடுத்துள்ளார்.

அத்துடன், சாந்தனின் தாயாரின் கோரிக்கை கடிதம் உள்ளிட்ட இதர விபரங்களை இன்றையதினம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பதற்கு சிறீதரன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சுதந்திரராஜா என்ற இயற்பெயர் கொண்ட சாந்தனுக்கு தற்போது 55 வயதாகின்ற நிலையில் அவர் கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். எனினும், இவர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது சொந்த நாட்டுக்கு திரும்புவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்னர் அனுப்புவதற்கான நடைமுறைகள் செயற்படுத்தப்படும் என்று இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சாந்தனுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதரனையடுத்து, கடந்த சில மாதங்களாக திருச்சி முகாமில் இருக்கும் சாந்தன், சொந்த நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்குமாறு பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் இந்தியாவுக்கான துணைத் தூதர், வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி உட்பட பலருக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

## சுதந்திர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் நீதிவான் தெரிவித்தார்.

76ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் இன்று (04) கொண்டாடப்படவுள்ள நிலையில் சுதந்திர தினத்தை கரி நாளாக வலியுறுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களில் பேரணிகளுக்கும் போராட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களில் காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கங்களும் போராட்டங்களில் ஈடுபடவுள்ளனர்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அரசியலில் ஈடுபடுவது எமக்காக அல்ல. எமது பதவிகளையும், எதிர்காலத்தினையும் சிறப்பாக உருவாக்குவதற்காக அல்ல. நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே போராடுகின்றோம். தற்போது நாம் தோல்வி அடையலாம். அடுத்த தினமே மீண்டும் எழுந்து நின்று அரசியலில் ஈடுபடுவோம்.

எமக்கு பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதால் சோர்வுகள் ஏற்படப்போவதில்லை. ஏனென்றால் எமக்கு இலக்குகள் உள்ளன. இந்த நாட்டை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த நாட்டினை எட்டு ஜனாதிபதிகள் ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் மூவர் உயிருடன் இல்லை. ஏனைய ஐவரும் தற்போது ஒரே தளத்திலேயே நிற்கின்றார்கள். அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகத் தமக்குள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அதிகாரங்களை பிறருக்கு விட்டுக்கொடு மனோநிலை இல்லை. நாம் அப்படியல்ல. மக்களுடனேயே உள்ளோம். மக்கள் எம்மை விரும்பினால் அவர்களுக்காக அர்ப்பணித்துச் செயற்படுவோம். இல்லையென்றாலும் எமது செயற்பாடுகள் வழமையைப் போன்றே முன்னெடுக்கப்படும் என்றார்.

## சிறைக்குச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸ்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம சர்ச்சைக்குரிய ஹியுமன் இமோகுளோபின் மருந்தை மருத்துவ விதிமுறைகளுக்கு அப்பால் சென்று விநியோகிப்பதற்கு சதித்திட்டம் தீட்டியமை, உடந்தையாக செயற்பட்டமை ஆகிய விடயங்களின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக கூறினார்.

அமைச்சர் ஒருவரிடத்தில் அமைச்சொன்றை கையளித்ததன் பின்னர் அதற்கான பொறுப்புக்கூறல் விடயங்களை மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி என்ற கையில் அமைச்சரிடத்தில் ஜனாதிபதி விடயங்களை ஒப்படைக்கின்றார் என்ற விடயத்தையும் குறிப்பிட்டார்.

இதற்க அமைவாக, நோயற்ற பிரஜைகளை உருவாக்கவது, பாதுகாப்பான மருந்துகளை பிரஜைகளுக்கு வழங்குவது ஆகிய முக்கிய பொறுப்பக்கள் அமைச்சரிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்படி செயற்பாட்டின்போது அமைச்சர் எவ்வாறு அமைச்சின் அதிகாரிகளுடன் உடனிருந்து செயற்பட்டார் என்பதை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளது.

நாட்டில் இல்லாத சுகாதார நெருக்கடியொன்றை அமைச்சர் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். அவர் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் ஊடாக முறையான பெறுகை நடவடிக்கைகளில் இருந்து விடுபட்டு தனியார் ஒருவர் பாரிய நரம்பியல் நோய்நிலைமைகளுக்காக மனித குருதியைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மருந்தை தயாரிப்பதற்கான சூழலை வழக்கின் எட்டாவது சந்தேகநபரான அமைச்சரே ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக, பிரதி சொலிஸ்டர் ஜெனரல் மன்றில் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் மனச்சாட்சியை உலுக்கி அமைச்சர் ஒருவராலேயே மருந்துப்பெறுகைக் கான நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் ஆகவே அமைச்சரால் அந்த விடயத்தில் பொறுப்புக்கூறலை புறந்தள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டதோடு முதல் பிரதிவாதியான மருந்து நிறுவன உரிமையாளர் 36மில்லியனை ஒரே நாளில் வைப்பிலிட்டு அதனை மீளப்பெற்றமையுமே சந்தேகம் ஏற்படுவதற்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலஞ்சம், ஊழல் ஒழிப்புக்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி நளிந்த இந்திரதிஸ்ஸ இல்லாத சுகாதார நெருக்கடியை இருப்பதாக காண்பித்து மருந்துப் பெறுகை நடவடிக்கைகளை முன்னெடுத்த விடயத்தில் அமைச்சர் கெஹலிய விடுபட முடியாது என்று குறிப்பிட்டார்.

அதேநேரம், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, தமது கட்சிக்கரரால் அனுமதி அளிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 182 மருந்து வகைகளில் 4மருந்துகள் தொடர்பிலேயே பிரச்சினைகள் காணப்படுகிறது. இது நடைமுறை நிலைமையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தமது கட்சிக்காரர், இருதய சத்திரசிகிச்சை, மற்றும் காலில் சத்திரசிகிச்சை ஆகியவற்றுக்கு உள்ளாகியுள்ளதால் எட்டுவகையான மருந்துகளை நாள்தோறும் உள்ளெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன தெரிவித்தார்.

இதனையடுத்து விடயங்களை ஆராய்ந்த நீதிவான் நிதிமன்ற நீதிபதி, சர்ச்சைக்குரிய மருந்துகள் கொள்வனவு தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஆவணங்கள் காணாமல்போயுள்தோடு, அந்த மருந்துகளால் மனித உயிர்களுக்கு விளைவுகள் ஏற்பட்டுள்ளதா என்பதையும் ஆராய்ந்து அறிக்கை தருமாறும் அதுவரையில் பிணையை வழங்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், சிறைச்சாலை வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

### சுதந்திர தினத்தை முன்னிட்டு

# தேசிய வீரர்களுடன் ஒரு தருணம் நிகழ்வுகள் திருகோணமலையில்





எப்.முபாஜரக்

திருகோணமலை மாவட்டச் செயலர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் தலைமையில் 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு 'நமது தேசிய வீரர்களுடன்ஒருதருணம்'எனும்தொனிப்பொருளில் நிகழ்வு நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

1948 ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னோடியாக இருந்த தேசிய வீரர்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் இடம்பெற்றதுடன், தனிநபர்களாக நாம் வெற்றியடைய வேண்டிய பண்புகள் குறித்தும் மாவட்ட அரசாங்க அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது. 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பிக்கும் முகமாக மாவட்டச் செயலக வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது நாட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர். (05)

# சம்மாந்துறை ஐ.பீ.எம்..கழக புதிய சீருடை அறிமுக நிகழ்வு



(எம்.ஐ.எம்.அஸ்ஹர் )

சம்மாந்துறை மண்ணில் விளையாட்டு கழகமா கவும், சமூக சேவை அமைப்பாகவும் வெற்றிகரமாக செயற்பட்டு வந்த ஐ.பீ.எம். கழகமானது இவ்வாண்டு 15 ஆவது ஆண்டை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

இந்தப்15 ஆவதுவருடபூர்த்தியைக்கொண்டாடும் வகையில் சம்மாந்துறை அல் அமீர் பாடசாலையில் புதிய சீருடை அறிமுக விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உரைபெயர்ப்பாளர் முஹம்மட் நஜிமுடீன் பிரதம அதிதியாகவும் சமூக ஆர்வலர் அனீஸ் விடே அதிதியாகவும் கலந்து கொண்டு கழகத்தின் புதிய சீருடையை அறிமுகம் செய்தனர்.

இந்நிகழ்வில் கழக நிர்வாக உறுப்பினர்கள், கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# முஸ்லிம்கள் பிளவுபடுவது எமது எதிர்காலத்துக்குத் தீங்காகும்!

### உலமா சபை பொதுச்செயலாளர் தெரிவிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்களுக்கிடையே ஏற்படும் பிளவுகள் முஸ்லிம் சமூகத்தின் எதிர் காலத்திற்கே தீங்காக அமைய முடியும். எனவே முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்து-வதற்கான முயற்சிகள் முஸ்லிம் சமூகத்தில் பரவலாக்கப்பட வேண்டும் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்-ஷெய்க் ஹ் அர்கம் நூரமித் தெரிவித்தார்.

அவரின் இளைய மகன் அண்மையில் காலம் சென்றதற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக இஸ்லாமிய ஐக்கியப் பேரவையின் ஸ்தாபகர்கள் அவரது இல்லத்துக்கு விஜயம் செய்த வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் நாடு, அத்துடன் ஏனைய மதங்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அனைத்துமக்களும் சமமான உரிமைகளைப் பெற்றவர்களே! இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒன்றாய் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது இஸ்லாமிய ஐக்கியப் பேரவையின் ஸ்தாபகரும் நடப்புத் தலைவருமான அஸ்-ஸெய்யித் ஸாலிம் றிபாய் மௌலானா சார்பில் அவருடைய சகோதரர் அஸ்-ஸெய்யித் திஹாம் றிபாய் மௌலானா மற்றும் ஏனைய ஸ்தாபகர்களான அஸ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அஷ். அப்துல் முஜீப் (கபூரி), நிர்வாக உத்தியோகத்தர் பியாஸ் முஹம்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

# பால்நிலை குறித்த கலந்துரையாடல்





கிளிநொச்சிமாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன்தலைமையில்பால்நிலை தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வைத்தியர்கள், அரச அதிகாரிகள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகஸ்த்தர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் பால்நிலை தொடர்பாகத் தற்பொழுது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் மாற்றங்கள் என்பவை தொடர்பாகக் கலந்துரையால் நடைபெற்றது. இதன்போது கிளிநொச்சிமாவட்டத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் 2022 வருடத்தைவிடவும் 2023 ஆண்டில் பெண்களுக்கு எதிரான சிறு குற்றம் 2022 - 89, 2023 - 166 குற்றங்களும் பதிவாகின

குடும்ப பிரச்சினை தொடர்பான முறைபாடுகள் 2022 - 1175, 2023 - 863பெண்களுக்கெதிரான வன்மு-றைகள்அதிகரித்து,கானப்படுவதாகவும் மற்றும் குடும்பவன்முறைகள் காரணமாக பல பெண்கள் மற்றும் சிறுவர்கள் அதிகமாகப் பாதிக்கபடுகின்றனர் எனவும் இதற்கான மாற்றுநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் மற்றும் போசாகற்ற நலிவடைந்த சிறுவர்கள் அவர்களுக்கான போசாக்கு மாத்திரைகளைவிட போசாக்கான உணவுகளை வழங்கநடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் சிறுவர்கள் தொடர்பாக ஏற்படும் பொலிஸாருக்கு வழங்கவேண்டிய தகவல்கள் தொடர்பாக புதிய தொலைபேசி 109 இலக்கம் என்று தெரியப்படுத்தப்பட்டதுடன், சிறுவர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பாகவும் கலந்துலையாடல் நடைபெற்றது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் விடுதலை

இலங்கையின் 76ஆவது விடுதலை நாள் இன்று கொழும்பில் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. கடந்த வருடம் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நாளைக் கொண்டாத்தான் வேண்டுமா என்கிற விமர்சனங்கள் கடுமையாக எழுப்பப்பட்டிருந்தன. அந்த விமர்சனங்களையெல்லாம் நிராகரித்து அப்போதே கொண்டாட்டங்களை நடத்தினார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய இந்த நாளைக்கூட கொண்டாட முடியாத நாடாகிவிட்டதா இலங்கை என்று மற்றைய நாடுகள் எண்ணிவிடக்கூடாது என்பதால் கொண்டாட்டங்கள் அவசியம் என்று அவர் விளக்கமளித்தார்.

எனவே இந்த ஆண்டு அவர் கொழும்பின் விடுதலை நாள் கொண்டாட்டத்தை வெகு விமர்சையாக முன்னெடுப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால், கடந்த முறை இதே நாளுக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று அறிவித்து, அதற்கான முயற்சி எனத் தெரிவித்து அனைத்துக் கட்சிக் கூட்டங்களையும் நடத்திய நிலைமையில் இருந்து விலகி, கடந்த ஒரு வருட காலத்தில் இலங்கை மீண்டும் தமிழ், சிங்கள தேசங்களாகப் பிளவுண்டிருப்பதை இந்த நாள் இன்று குறித்து நிற்கின்றது.

தெற்கில் கொண்டாட்டங்கள் விமரிசையாக நடக்க, வடக்குகிழக்கில்ஒட்டுமொத்தமாகஇன்றைய நாளை கரிநாளாக அறிவித்திருக்கிறார்கள். இன்றையதினத்தில்தமிழர்களின்உணர்வுகளை வெளிப்படுத்தும்விதத்தில்எதிர்ப்புப்பேரணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது அரகலய, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ், சிங்களப் பிளவு இன்னும் ஆழமாக வேரூன்றிச்செல்வதையேவெளிப்படுத்துகின்றது.

இன்றையநாளுக்கானதனதுஉரையில்அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பது தொடர்பாகப் பேசுவார் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தோஅதிகாரப்பகிர்வுகுறித்தோஅவர்எதுவும் பேசமாட்டார் என்பதையும் எதிர்பார்க்கலாம். ஒரு வருடத்திற்குள் நடந்திருக்கும் இந்தத் தலைகீழ் மாற்றமே இலங்கையின் எல்லா சிங்கள அரசியல் தலைவர்களாலும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது.

பண்டா – செல்வா ஒப்பந்தம் டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் கிழித்து வீசப்பட்டமைக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவரானதும் தமிழ், முஸ்லிம் மக்களுடன் தனது வாக்குறுதி மூலம் செய்திகொண்ட ஒப்பந்தங்களுக்கும் நேர்ந்த கதிகள் ஒரே மாதிரியானவை. ஒப்பந்தங்களைச் செய்தவர்களே அவற்றைத் தமது காலில் போட்டு மிதித்து தமிழ், முஸ்லிம் மக்களின் மீது ஏறி நின்று அரசியல் செய்கிறார்கள் என்கிற வரலாறு தொடர்கின்றது.

அதுவே இந்த நாட்டின் சாபக்கேடு. அமைதியின்மைக்கான வழிகாட்டி. இதிலிருந்து மீளாதவரையில் இலங்கையின் விடுதலை நாள் சாத்தியமில்லை. பிரிட்டிஷார் இந்த நாட்டிலிருந்து வெளியேறிய நாள் மட்டுமே எஞ்சியிருக்கும்.



# பாலஸ்தீனம்: கடந்ததும் நடப்பதும்

**ராமச்சந்திர குஹா**

பெங்களூர் நகரின் பழைய புத்தகக் கடைகளில் புகுந்து ஆராய்ந்தபோது, 'நவீன காலத்தில் நான் வாழ்ந்தபோது' (When I Lived in Modern Times) என்ற ஆங்கில நாவல் கண்ணில் பட்டது. நாவலாசிரியர் லிண்டா கிராண்ட் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. இஸ்ரேலிய அரசு உருவாவதற்கு முன்னால், அந்தப்பிரதேசம்பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்தபோது பாலஸ்தீனத்தில் கதை நடப்பதாக அந்த நாவல் எழுதப்பட்டிருந்தது. நாவலை வாசிக்க அதுவே போதுமானதாக இருந்தது.

பாலஸ்தீன விவகாரம் அன்றாடம் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாக வரும் இக்காலத்தில், அதன் முந்தைய காலம் பற்றிய தகவல்கள், உண்மைகளை ஓரளவு அறிய உதவும் என்று கருதியே வாங்கினேன்.

நாவல்என்னைஏமாற்றிவிடவில்லை. பிரிட்டனில் பிறந்து வளர்ந்து, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு புதிய யூத நாட்டுக்குத் தன்னால் என்ன செய்ய முடியும் என்ற ஆர்வத்தில் குடியேறிய எவிலின் செர்ட் என்ற பெண்ணின் கண்ணோட்டத்தில் நாவல் எழுதப்பட்டிருக்கிறது. எவிலின்தான் கதை சொல்லி. கிபுட்ஸ் என்று அழைக்கப்படும் யூதர்களின் விவசாயக் கூட்டுப்பண்ணையில் அவர் கதை தொடங்குகிறது.

சோலிஸக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட ஒரு ரஷ்ய யூதர் அந்தப் பண்ணையில் அனைவர் மீதும் செல்வாக்குள்ளவராக இருக்கிறார். பாலஸ்தீன பாலைவனத்தை, வேளாண்மை பூத்துக்குலுங்கும் சோலை வனமாக மாற்ற வேண்டும் என்ற தீவிரம் அவரைத் தொற்றிக்கொண்டிருந்தது.

### பாலஸ்தீன வளம்

அவர்அங்குகுடியேறுவதற்குப்பலஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அங்கு வாழும் பாலஸ்தீனர்கள் மீது அவருக்கு கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது. 'இந்தப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பிரிட்டிஷார் விலகி, நாம் இதைக் கிருபையுடன் ஆளத் தொடங்கினால், பழங்குடிகளாக இன்னும் பழைய சிந்தனைகளிலேயே ஊறிக்கிடக்கும் இந்தப் பாலஸ்தீனர்கள் எழுச்சி பெற்று நவீன சிந்தனைக்கு மாறுவார்கள். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் இந்த இடத்தைவிட்டே போக நேரும். நிச்சயமாக அவர்களுக்கு நம்மைச் சுற்றி விரிந்து பரந்த இந்த அரபுப் பிரதேசத்தில் வாழ்வதற்கென்று இடமிருக்கும் அல்லவா? இந்த நிலங்களுக்கு நாம் அவர்களுக்குப் பணம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறோம், அவர்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் அவர்களை ஆளும், ஆண்டைகள் இந்த நிலங்களை நமக்கு விற்றிருக்கிறார்கள். நாம் அவர்களை ஏமாற்றிவிடவில்லை, நல்ல விலை கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறோம். இந்த இடத்தில் எதுவும் விளையாமல் இதைப் பாழடித்தது அவர்கள்தான்; - நாம்அல்லர். அவர்கள்இங்கேஎத்தனைஆண்டுகளாக வாழ்ந்திருப்பார்கள், ஒரு நூற்றாண்டு இருக்குமா? எப்படி வைத்திருந்தார்கள் இந்த நிலத்தை - ஒரு புல் பூண்டுகூட விளையாமல்? இருபதே ஆண்டுகளில் இந்த பூமியை நாம் எப்படி மாற்றியிருக்கிறோம்? ஏன்? காரணம் நம்முடைய நம்பிக்கை.-நாம் எதிர் காலம் தொடர்பாக நம்பிக்கையுடன் வாழ்கிறோம்'.

### லிண்டா கிராண்ட்

இந்த வரிகளைப் படித்ததும் யூத மெய்யியலாளர் மார்ட்டின் பீபர் மகாத்மா காந்திக்கு 1938இல் எழுதிய கடிதத்தில் இடம்பெற்ற வாசகங்களும் இதே கருத்தையே எதிரொலித்தது நினைவுக்கு வந்தது. நாவலில் வரும் கதாபாத்திரமான யூத இனப் பெருமை கொண்ட ரஷ்யரைப் போல அல்லாமல், யூதர்களும் அராபியர்களும் சமரசமாக வாழ வேண்டும் என்று மார்ட்டின் பீபர் நம்பினார். யூதர்கள் அராபியர்களுக்கு ஆசான்களாக இருந்து வழிகாட்ட வேண்டும் என்றார்.

பாலஸ்தீனத்தில் விவசாய சாகுபடி முறைகள் இன்னமும் கற்காலத்திலேயே இருப்பதாகக் குறை கூறிய அவர், அராபியர்களுக்கு நாகரிகம் கற்றுத் தரவும் எல்லாத் துறைகளிலும் அங்கு நவீனம் பின்பற்றப்பட்டு முன்னேற்றம் ஏற்படவும் யூதர்கள் அவசியம் என்றார். பாலஸ்தீன மண்ணைக் கேளுங்கள் 1300 ஆண்டுகளாக அராபியர்கள் அது வளம் பெற என்ன செய்தார்கள், ஐம்பதாண்டுகளில் நாங்கள் என்ன செய்தோம் என்று; பாலஸ்தீன நில மகளின் பதிலே இந்த மண்ணுக்கு உரியவர்கள் யார் என்பதற்குச் சான்றிதழாக இருக்காதா?" என்று கேட்கிறார் பீபர்.

பாலஸ்தீனத்தில் வாழும் அராபியர்கள் உழைப்பதில், நவீனத் தொழில்நுட்பங்களைக் கையாள்வதில் தங்களைவிட ஆற்றல் குறைவான இனத்தவர் என்றே யூதர்கள் கருதினார். இந்த நிலம் எங்களை அங்கீகரித்துவிட்டது. யூத விவசாயிகள் தங்களுடைய சகோதரர்களான அராபிய விவசாயிகளுக்கு நிலத்தை மேலும் தீவிரமாக சாகுபடிக்குத் தயார்செய்வது எப்படி என்று கற்றுத் தந்துகொண்டிருக்கிறார்கள். இதைப் போல மேலும் பலவற்றை அவர்களுக்குக் கற்றுத் தர விரும்புகிறோம்" என்றே காந்தியிடம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் பீபர்.

### யாருக்கு அதிகாரம்

லிண்டா கிராண்டின் நாவலில் வரும் கதா பாத்திரம், கிபுட்ஸ் வாழ்க்கை முறையால் மிகவும் களைத்துவிடுகிறார். ஜெர்மானிய பவ்ஹாஸ் கட்டடக் கலை பாணியில் உருவாக்கப்பட்ட இஸ்ரேலியத் தலைநகரமான டெல் அவிவ் செல்ல விரும்புகிறார். யூதர்களே அதிகம் வாழும் குடியிருப்பில் அடுக்ககம் ஒன்றில் வாடகைக்குக் குடியேறுகிறார்.

பெர்லினிலிருந்து வந்து அங்கு குடியேறிய திருமதி லின்ஸ் என்பவருடன் சிநேகம் வைத்துக்கொள்கிறார். நம்முடைய இந்த யூத நகரத்தில் உலகிலேயே மிகச் சிறப்பாக படித்த ஆண்களும் பெண்களும் வசிக்கின்றனர்" என்று திருமதி லின்ஸ் பெருமை படப் பேசுகிறார். நம்முடன் அறிவியலாளர்கள், வரலாற்றாசிரியர்கள், இசைவாணர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் என்று அனைத்துத் துறையிலும்சிறந்துவிளங்குகிறவர்கள்வாழ்கிறார்கள். தெருவில் நாம் பார்க்கும் அராபியர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், தர்பூசணி விற்கத்தான் அவர்களுக்குத் தெரியும். கல்வியிலும் ஆற்றலிலும் அனுபவத்திலும் - யூத இனத்தைவிட பல மடங்கு கீழே இருக்கும் அராபியர்கள், பெரும்பான்மை சமூகமாக இருக்கிறார்கள் என்பதற்காக நம்மை ஆளவும் அதிகாரம் செலுத்தவும் விட்டுவிட முடியுமா" என்று கேட்கிறார் திருமதி லின்ஸ்.

டெல் அவிவ் நகரில், 'இர்குன்' என்ற ஆயுதமேந்திய யூத வன்முறை கும்பலைச் சேர்ந்த ஓர் இளைஞனுடன் எவிலினுக்கு நட்பு ஏற்படுகிறது. அதற்குப் பிறகு கிங் டேவிட் ஹோட்டலில் இர்குன் கும்பல் நடத்திய வெடிகுண்டு வீச்சில் அப்பாவி யூதர்கள் பலரும் இறந்தது குறித்து அந்த இளைஞன் கவலையேபடவில்லை, அங்கிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொல்லத்தான் வெடிகுண்டு வீசப்பட்டது, ஆனால் யூதர்களும் பலர் உடன் இறந்தனர்.

இதற்காக எவிலின் அந்த இளைஞனைக் கடிந்துகொள்கிறார். இங்கே பார் எவிலின், வெடி குண்டுகளைப் போல மாற்றத்தைக் கொண்டுவரும் சாதனம் ஏதுமில்லை. ஒரு நகரத்தைப் புதிதாக உருவாக்கவேண்டுமென்றால்அதைக்குண்டுவீச்சுக்கு இரையாக்கினால்போதும். எல்லாமே இடிந்து தரை மட்டமான பிறகு இடிபாடுகளை அள்ளிக் கொட்டிவிட்டு மீண்டும் புதிதாக வசதிபோல கட்டிக்கொள்ளலாம்,

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய கட்சி தொடங்கிய விஜய்க்கு ஜீவன் வாழ்த்து



சினிமா ஊடாக இரசிகர்களின் மனம் வென்ற தளபதி விஜய், அரசியல் ஊடாகவும் மக்களின்மனங்களைவெல்லும் வகையில்செயற்படுவார்என்ற முழு நம்பிக்கை உள்ளது.

எனவே, விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகத்தின் வெற்றி பயணம் தொடர வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு -

நடிகர்விஜய்சினிமாதுறையில்உச்சம்தொட்டவர். அவருக்கென இரசிகர்கள் பட்டாளமே உள்ளது. தளபதியென இரசிகர்கள் அவரை கொண்டாடும் அளவுக்கு சினிமாத்துறையில் நேர்த்தியாகவும், நேர்மையாகவும் நடத்துகொண்டுள்ளார். அதுமட்டுமல்ல தனக்காக உருவான இரசிகர் மன்றத்தை விஜய் மக்கள் இயக்கமாக மாற்றி அதன் ஊடாக மக்களுக்குபல்வேறுநலத்திட்டங்களைமுன்னெடுத்து வந்தார்.

இந்நிலையில் அப்பணிகளை மேன்மேலும் முன்னெடுப்பதற்காகவும், சமத்துவம், சமூக நீதிக்காகவும் விஜய் மக்கள் இயக்கம், தமிழக வெற்றி கழகமாக அரசியல் பயணத்தை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

சினிமாவில் உள்ள செல்வாக்கை மட்டும் பயன்படுத்திஎடுத்தோம், கவிழ்த்தோம்என அரசியல் பயணத்தை ஆரம்பிக்காமல் நன்கு திட்டமிடலுடன் அப்பயணத்தை விஜய் ஆரம்பித்துள்ளார் என்பது அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மூலம் உறுதியாகின்றது.

நல்லாட்சி, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றை மையப்படுத்தியதாக அரசியல் பயணம் அமையும் என விஜய் அறிவித்துள்ளதை வரவேற்கின்றோம். இலங்கையில்மலையகத்தமிழர்களுக்குசமத்துவம், சமூக நீதியை வலியுறுத்தியே எமது அரசியல் பயணமும்தொடர்கின்றது. அந்தவகையில்மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான பயணத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகத்தின் அரசியல் பயணம் வெற்றியளிக்க மலையக மக்கள் சார்பிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இணைந்து பயணிக்கக்கூடிய இடங்களில் இணைந்து பயணிக்கவும்,புரிந்துணர்வுடன்செயற்படவேண்டிய இடங்களில் புரிந்துணர்வுடன் செயற்படவும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்ற செய்தியையும் விஜய்க்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளேன். - என்றார். (05)

# பாலஸ்தீனம்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குண்டு வீசப்பட்ட இடத்தில் உன் கற்பனைக்கேற்ப மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்கிறான்.

**மோதல்களின் கற்பனைக் காட்சிகள்**

பாலஸ்தீனத்தில் ஓராண்டு இருந்த பிறகு மீண்டும் இங்கிலாந்துக்கு வந்து யூத இசைவாணரைத் திருமணம் செய்துகொண்டு இரு குழந்தைகளுக்குத் தாயாகிறாள் எவிலின். சில பத்தாண்டுகளுக்குப் பிறகு கணவர் இறந்துவிடுகிறார், மீண்டும் டெல் அவிவ் சென்று தன் இறுதிக் காலத்தை அங்கேயே கழிக்க முடிவெடுக்கிறார். முன்னர் அவருடைய பக்கத்து வீட்டில் குடியிருந்த திருமதி லின்ஸ் அங்கேயே வாழ்கிறார். இஸ்ரேலிய அரசும் இஸ்ரேலிய ராணுவமும் பாலஸ்தீனர்களை ஒடுக்குவதற்கு எதிராக அவர் பரப்புரை செய்கிறார்.

இஸ்ரேலிய அரசு மற்றும் ராணுவத்தினரின் அட்டூழியங்கள் குறித்து லின்ஸ் கூறும்போது, எவிலினால் தாங்க முடியவில்லை, இப்படியெல்லாம் யாராவது செய்வார்களா என்ற கோபமே ஏற்படுகிறது, அதுவும் யூதர்கள் இப்படிச் செய்யவேகூடாது என்கிறாள். இதேபோன்ற கொடூரச் செயல்களைச் செய்யக்கூடியவர்கள்தான் பாலஸ்தீனர்கள் என்றாலும், சித்திரவதைகளால் மனிதர்களை மேம்படுத்திவிட முடியாது, ‘பிரிமோ லெவி’ (இத்தாலிய யூத எழுத்தாளர், விஞ்ஞானி) விதி விலக்கு என்கிறாள் எவிலின்.

புத்தகத்தின் கடைசி பந்தி, லின்ஸும் எவிலினும் பார்த்த ஒரு நாடகத்துடன் முடிகிறது. ‘காசாவில் நம்முடைய ராணுவ வீரர்கள் செய்த அட்டூழியம்’ என்பது நாடகத்தின் தலைப்பு. அந்தப் பந்தியின் அடுத்த வாக்கியம், ‘ஒரு காபிக் கடை மீது ஹமாஸ் குண்டு வீசுகிறது, அருகில் இருக்கும் ஜன்னல்கள் வழியாக கடையிலிருந்து கேக் துண்டுகள் சிதறி விழுகின்றன’ என்கிறது.

இந்த நாவல் 1990களில் எழுதப்பட்டிருக்கிறது. ஆஸ்லோ நகரில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தோல்வியில் முடிந்தன, மேற்குக் கரையில் யூதக் குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தது, பாலஸ்தீனர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்தன என்ற பின்னணியில் நாவல் வெளியாகியிருக்கிறது. எனவே, 1940களில் இந்த மோதல்கள் எப்படித் தொடங்கின என்று கற்பனையாக ஒரு காட்சியைச் சித்தரித்திருக்கிறார் லிண்டா கிராண்ட். இருவருக்குமான மோதல் கொடூரமான கட்டத்தை அடைந்துவிட்ட வேளையில், இந்த நாவலைப் படிப்பது உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. தங்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருக்கும் அராபியர்களிடம் பச்சாத்தாபத்துடன் நடந்துகொள்வதாகக் கருதும் போக்கும், இஸ்ரேலிய வலதுசாரிகளின் வன்செயல்களை நியாயப்படுத்தும் பேச்சுகளும், இஸ்ரேலிய அரசு உருவான காலத்திலிருந்தே தொடங்குகின்றன. அதேசமயம், பிற இனங்கள் அனுபவித்திராத கொடுமைகளை யூதர்கள் அனுபவித்ததையும் நூல் விவரிக்கிறது. ஐரோப்பாவில் நிலவிய யூத விரோத உணர்வு, விசவாயு மூலம் யூதர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்ற ஹிட்லரின் வதை முகாம்கள், இஸ்ரேல் என்ற நாடு உருவானதும் அதை அழிக்க அதைச் சூழ்ந்திருந்த அரபு நாடுகள் நடத்திய கூட்டுப் படையெடுப்பு ஆகியவற்றையும் நூல் தொட்டுச் செல்கிறது. புதிதாக உருவான இஸ்ரேல் மட்டுமே தங்களுக்குப் பாதுகாப்பான நாடு என்று நம்புவதால் அதை உயிரைக் கொடுத்தாவது காக்க வேண்டும் என்று யூதர்கள் நினைப்பதை நூல் உணர்த்துகிறது.

உள அருஞ்சொல்




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சாய்ந்தமருதில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு





கடந்த சுனாமிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் உள்ள கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள சாய்ந்தமருது கமு∕கமு∕ எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் (புத்தகப்பை) வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுனதினம்(வெள்ளிக்கிழமை) பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பாடசாலையில் உள்ள குறைநிறைகளை பாடசாலை நிர்வாகத்திடம் ஆராய்ந்ததுடன், மாணவர்களிடம் கல்வி மேம்பாட்டு விடயங்கள் தொடர்பில் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல் நஜீம், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளரும், உதவிக்கல்வி பணிப்பாளருமான எம்.என்.எம்.ஏ. மலிக், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் பொதுஜன தொடர்பாடல் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# உலக சாதனை புரிந்த சிறுமிக்கு கௌரவம்





(எஸ்.அஷ்ரப்கான்)

'அதிகபட்ச பெருக்கல் அட்டவணைக்கு பதிலளித்த குழந்தை' என்ற உலக சாதனைக்கான சர்வதேச சாதனை புத்தகத்தால் விருது வழங்கப்பட்ட 2 வருடமும் 10 மாதமும் நிரம்பிய சிறுமி தாரா பிரேம்ராஜ் இற்கு திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் பாராட்டு நிகழ்வொன்று இடம்பெற்றது.

ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்த பாராட்டினை வழங்கியதுடன் அச்சிறுமிக்கு நினைவு சின்னம் மற்றும் பரிசில்களையும் ஆளுநர் வழங்கி வைத்தார். மேலும் இந்த சாதனைக்காக கடுமையாக உழைத்த அவர்களது பெற்றோர்களும் இங்கு பாராட்டப்பட்டனர். (05)



## 600 சிறைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்கத்துடன் நடந்துகொண்ட மற்றும் அபராதத் தொகையை செலுத்த முடியாத கைதிகளுக்கே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது.

அத்துடன் சுதந்திர தின விழாவையொட்டி உறவினர்களை பார்வையிட சிறைக்கைதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கைதி ஒருவரை பார்ப்பதற்கு குடும்பத்தில் மூவருக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் தாய்லாந்தின் பிரதிப் பிரதமரும் வர்த்தக அமைச்சருமான பூம்தம் வெச்சயச்சாய் மற்றும் இலங்கையின் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இலங்கை 22 மில்லியன் சனத்தொகையை கொண்டிருக்கும் அதேநேரம் இலங்கையின் 37ஆவது ஏற்றுமதி நாடாக காணப்படும் தாய்லாந்து 71.6 மில்லியன் சனத்தைகையை கொண்டிருக்கிறது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதியான தேயிலை, மிளகு மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களுக்கு தாய்லாந்து வரி விதித்துள்ளது. இலங்கை 2022 ஆம் ஆண்டில் 58.82 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்களை தாய்லாந்துக்கு ஏற்றுமதி செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் 495 மில்லியன் அமெரிக்க டொலர்களை மொத்த தேசிய வருமானமாக ஈட்டிய ஆசிய நாடாக தாய்லாந்து காணப்படுகிறது.

தாய்லாந்து 17.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் ஆசியான் சங்கத்தில் மிகப் பெரிய முதலீட்டு நாடாகவும் தாய்லாந்து மாறியிருந்தது. 2005- 2022 வரையான காலப்பகுதியில் இலங்கையில் தாய்லாந்து 92 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நேரடி முதலீடுகளை மேற்கொண்டிருக்கிறது.

2018 ஆம் ஆண்டில் 550 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட இருதரப்பு வர்த்தகப் பெறுமதியை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் மூன்றுமடங்காக அதிகரித்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும் இலங்கைஈயின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான முதன்மை சாத்திமாகக் காணப்படுகிறது என்று ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம், பொருட்கள் வர்த்தகம், வர்த்தக சட்ட அனுமதி, சுகாதார மற்றும் மூலிகை சுகாதார செயன்முறைகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், வர்த்தகத் தீர்வுகள், சேவை வர்த்தகம், முதலீடுகள், சுங்கச் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை இலகுபடுத்தல், பொருளாதார ஒத்துழைப்பு, அறிவுசார் சொத்துக்களின் உரிமம், அடிப்படை ஏற்பாடுகள், நிறுவன மற்றும் இறுதி செய்யப்பட்ட ஒதுக்கீடுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட துறைகளைஉள்வாங்கும் வகையில் 14 அத்தியாயங்களுடன் கூடிய விரிவான 9 சுற்றுகளில் வர்த்தகப் பேச்சுக்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவை ஒப்பந்தமும் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. 1950இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வலுப்படுத்தும் வகையிலும், இந்த புதிய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவை

தொடர்ச்சி 10ம் பக்கம்....

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தை மக்கள் முற்றுகை

## பலப்படுத்தப்பட்ட பொலிஸாரின் பாதுகாப்பு



வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலத்தின் பிரதான வாயிலை பொதுமக்கள் முற்றுகையிட்டமையால் ஏற்பட்ட பதற்ற நிலமையையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

குடிவரவு குடியகல்வு திணைக்கள வாயிலின் முன்பாக வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தில் சாதாரண மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை பெறுவதற்காக வியாழக்கிழமை இரவு முதல் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காரியாலயம் முன்பாக வரிசையில்காத்திருந்தமையுடன்வரிசையில் காத்திருந்தவர்களுக்கான வரிசை இலக்கம் பொலிஸாரால் வழங்கப்பட்டது வரிசையில் நின்றவர்களின் பெயர்களையும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பதிவு மேற்கொண்டனர்.

இந்நிலையில் 85 ஆம் இலக்கம் பெற்ற நபர் வாயிலின் வெளியே வரிசையில் நிற்கத்தக்கதாக இனி எவருக்கும் கடவுச் சீட்டு வழங்க முடியாது எனவும் 160நபர்களை தாம் ஒருநாள் சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையுடன் 50நபர்களை சாதாரண சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையால் பிறிதொரு தினத்தில் வருமாறு குடிவரவு குடியகல்வுத்திணைக்களபிராந்திய காரியாலய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த வரிசையின்நின்றபொதுமக்கள் 85 ஆம் இலக்கம் பெற்ற நபர் வெளியே நிற்க எவ்வாறு 160 ஆம் இலக்கம் பெற்றநபர் உள்ளே செல்ல முடியும் என்பதுடன் அங்கு நின்றபெண்கள் உள்ளடங்கலான மாபிய கும்பல் கடவுச்சிட்டு பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசைகளுக்கு இடையே அவர்களை உள்நுழைக்கின்றனர் என தெரிவித்ததையடுத்து அங்கு குழப்பநிலமை ஏற்பட்டதுடன் திணைக்கள பிரதான வாயிலினை வழிமறித்துதமதுஎதிர்ப்பினையும் பொதுமக்கள் வெளிப்படுத்திருந்தனர்.

அதனால் கடவுச்சீட்டு திணைக்களம் முன்பாக பதற்ற நிலமை நிலவியதுடன் வவுனியா பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பிரியரத்தன தலைமையிலானபொலிஸ்குழுவினர்குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தினுள் சென்று ஆணையாளருடன் கலந்துரையாடினார்.

இன்று மேலதிக நபர்களை உள்ளெடுக்க முடியாது எனவும் , பிறிதொரு தினத்தில் கடவுச்சீட்டினை பெறுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கான இலக்கம் வழங்குவதாக ஆணையாளர் உறுதிமொழி அளித்துள்ளதாகவும் கடவுச்சிட்டினை பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசையில் ஈடுபடுத்துபவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுவதாக வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பிரியரத்தன அவர்கள் குழப்பத்தில் ஈடுபட்ட மக்களிடம் தெரிவித்தயைடுத்து சுமுகமான நிலமைக்கு பொதுமக்கள் வந்திருந்தனர். குடிவரவு குடியகல்வுத்திணைக்கள அதிகாரிகளினால் பிறிதொரு தினத்தில் முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டை பெறுவதற்கான இலக்கமும் இதன் பாஹிது வழங்கப்பட்டது. (05 - 100)

# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை முன்னெடுக்க கலந்தாய்வு!

(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அன்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 1262 குடும்பங்களுக்குமான உலக உணவு திட்டத்தின் உலர் உணவு பொதிகளை வழங்குவது தொடர்பிலான ஆரம்பக் கட்ட கலந்துரையாடல் பிரதேச செயலாளர் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இதில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த வேலைத்திட்டம் முன்னெடுப்பது தொடர்பில் உலக உணவு திட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு விளக்கங்களை வழங்கி வைத்தார்கள்.

இதில் உதவிபிரதேசசெயலாளர் அஸ்லம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் தாசிம், தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் அஸாறுடீன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள். (05)







# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒன்றிணைந்த சிரமதானம்

(அபு அலா)

76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டுகிளீன்ஸ்ரீலங்கா, அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் ஒன்றிணைந்த சிரமதானப் பணியை நேற்று (சனிக்கிழமை) காலை பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுத்தது.

சுதந்திர தின நிகழ்வை அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தால் பொத்துவில் அறுகம்பை பொது மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்தது.

இந்தப் பணியில் ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் கிளீன் ஸ்ரீலங்காவின் தலைவருமான ஏ.முஸம்மில் மற்றும் அதன் செயலாளர் எச்.எம்.இமாம் மற்றும் அதன் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

# சம்மாந்துறையில் அறுவடை விழா



(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

ஒருங்கிணைந்த தாவரப்போசணை முகாமைத்துவ பயிற்சியின் (555 5) வயல் அறுவடை விழா நிகழ்வு விவசாய விரிவாக்கல் நிலைய சம்மாந்துறை பிராந்திய உதவிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

பத்தாண்ட வட்டை ( ஆடைத் தொழிற்சாலை அருகில்) நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.எல். முகம்மட் ஹனீபா கலந்து சிறப்பித்தார். (05)

# ரயில் மோதியதில் குடும்பஸ்தர் சாவு

## கிளிநொச்சியில் சம்பவம்

பாதுகாப்பு கடவையை கடக்க முற்பட்ட குடும்பத்தர் ரயிலுடன் மோதுண்டதில் பலியாகியுள்ளார். மேற் படி சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணி யளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி டிப்போ வீதியில் ரயில் நிலையத்துக்கு அண்மித்துள்ள பாதுகாப்பான ரயில் கடவை மூடப்பட்ட நிலையில், குறித்த கடவையை கடக்க முற் பட்டவரையே ரயில் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் கடக்க முயன்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05-113)

# சுதந்திர தினத்துக்கான பணிகள் வவுனியா மாவட்டத்தில் பூர்த்தி





இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று (ஞாயிற்;றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளநிலையில்அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான பணிகள் வன்னி இராணு-வத்தினரினால்மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், ஏனைய ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட செயலகத்துடன்இணைந்துபிரதேசசெயலகத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மாணவர்கள், முப்படையினர் ஆகியோரின் அணிவகுப்புக்கான ஒத்திகைகள் கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்றிருந்தன. மேலும் ஏ9 வீதியைத் தற்காலிகமாக மூடுவதற்குரிய நடவடிக்கைளும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ சரத்சந்திர தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், நிகழ்வின் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் கலந்து கொள்ளவுள்ளார். (05-100)

## மாத்தறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது.

இதன் முக்கிய நிகழ்ச்சியானது, கலைஞரும் தொல்லியல் ஆய்வாளருமான பேராசிரியர் ஜகத் வீரசிங்கமற்றும்இசைக்கலைஞரும் கல்வியாளருமான கலாநிதி சுமுதி சுரவீர ஆகியோரால் வழிநடத்தப்படுகிறது.

பிரதீப் சந்திரசிறி, பிரியந்தி அனுஷா, பீரி ரஹ்மான், ஹேமா ஷிரோனி, மாத்தறை பால பொதுப்பிட்டிய மற்றும் அனுர கிரிஷாந்த உட்பட 12 கலைஞர்கள் உள்ளிட்ட குழுவினால் முன்வைக்கப்படும் கலைநிகழ்ச்சிகளோடு பேராசிரியர் ஜகத் வீரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் மாத்தறையைச் சேர்ந்த 8 கலைஞர்களால் உருவாக்கப்பட்ட மேலதிக சமூகக் கலை நிகழ்ச்சியும் இதில் உள்ளடங்கும்.

இந்த நிகழ்வில் இன்று மஹிந்த விஜேசேகர விளையாட்டரங்கில் 7 வகையான நிகழ்ச்சிகளுடன் வெளிப்புற இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. அமில சந்துருவனின் நாட்டுப்புற இசை, பிரேசில் பாடகர் போலாவினால் ஜேஸ் போசா நோவா மற்றும் ரெக்கே இசை, பஹதரட்ட பெர இசை மற்றும் ஜேஸ் பெர இசைக் குழுவானபாலிபோனிக்ஸ்குழுவின் நிகழ்ச்சி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ரெப் சஹாகர்னாடிக் பாடகர் ரோலக்ஸ் ரசத்தி மற்றும் பல கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் நடக்கவுள்ளன.

கட்டண நுழைவுச் சீட்-டு விநியோகிக்கப்படும் இசை நிகழ்ச்சியைத் தவிர, மாத்தறை கலைவிழாவின்ஏனையஅனைத்து நிகழ்ச்சிகளையும் இலவசமாக கண்டுகளிக்கலாம்.

காலி சாகித்திய விழாவின் பின்னர், வருடத்தின் தொடக்கத்தில் மாத்தறையின் தென் கரையோரப் பகுதிகளில்கலைவிழாநடத்தப்படுவது இலங்கையருக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் கிடைக்கும் தனித்துவமான அனுபவமாகும். இதன்போது கலை, ஆக்கம், கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் கலந்துரையாடல்கள், சமூக சந்தைகள் உள்ளிட்ட பல கலாச்சார அம்சங்கள் இங்கு இடம்பெறும்.

யுனெஸ்கோ அமைப்பினால் மாத்தறை கோட்டை, மாத்தறை நகரம் மற்றும் அதன் பாரம்பரிய கலை அம்சங்கள் பாதுகாப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கு தனித்துவமான பங்களிப்பை வழங்குவதோடு, அதனூடாக ஏனைய பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளுடன் அறிவைப் பரிமாறிக்கொள்ளவும்உதவுகின்றது.

கலை விழாவைக் காண வந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஜனாதிபதி ஈடுபட்டார்.

மாத்தறை கலை விழாவில் பங்கேற்றதன் பின்னர், நில்வள கங்கைக்கு அருகில் உள்ள பூங்காவின் கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாத்தறை அபிவிருத்தித் திட்டத்தையும் பார்வையிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தேசிய பாதுகாப்புதொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, தென் மாகாண ஆளுநர் விலீகமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான கருணா கொடிதுவக்கு, நிபுன ரணவக்க, முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கயான் சஞ்சீவ, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியில் சென்றதன் காரணமாக நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டும் என்ற காரணத்தினால் நாங்கள் ஒன்றிணைந்துசெயல்படுகின்றோம்.

தமிழ்கட்சிகள்5ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்துவிளக்கை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில்நாங்கள்அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்கவேண்டும்என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனின் கூற்ற நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணி திரள்வோம். ஆனால், நாம் மீண்டும் ஒரு கட்சியின் கீழாகவோ அல்லது சின்னத்தின் கீழாகவோ இணைந்து செயற்பட முடியாது. ஆகவே, பொதுச்சின்னம் அறிமுகப் படுத்தப்பட்டு கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வெண்டும்.

வீட்டுச் சின்னம் கூட பொதுச்சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சணூனுக்கு விருது

(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ்)

புத்தளம் ரெக்லா விளையாட்டு கழகம் புத்தளம் இஜ்திமா மைதானத்தில் தொடராக நடத்தி வரும் புத்தளத்தின் பாரம்பரிய விளையாட்டு போட்டியான மாட்டு வண்டி போட்டியில் கடந்த 04 வருடங்களாக அறிவிப்பாளராக கடமையாற்றியமைக்காக புத்தளத்தின் மூத்த ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான எம்.யூ.எம். சணூன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்தோடு இவர் ஊடகத்துறைக்கு பிரவேசித்து 43 வருடங்கள்நிறைவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் அதிதிகளாக புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம் றபீக், புத்தளம் நகர சபை முன்னாள் உறுப்பினர்களான றனீஸ் பதியுதீன், பர்வின்ராஜா, ரெக்லா விளையாட்டு கழகத்தின் தலைவர் பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி விருதை வழங்கிவைத்தனர். (05)

# சம்மாந்துறையில் விபத்து 12 வயது சிறுவன் இறப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

விஞ்ஞான பீடத்தின் முன்னால் நேற்று(சனிக்கிழமை) காலை இடம் பெற்ற விபத்தில் 12 வயதுடைய ஹாறுன் பாசிர் எனும் சிறுவன் சம்பவ இடத்திலே பலியானார்.

வாகனம் (லொறி) செலுத்தி வந்த சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கலாம். அவரிடம் எந்தவிதமான குறைபாடுகளும் காணப்படவில்லை. அவர் பொருளாதார ரீதியாக நாட்டைச் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்கின்றார். ஆகவே அவரை மீண்டும் வேட்பாளராக களமிறக்குவதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

ஆனால், பொது ஜன பெரமுன இந்த விடயம் தொடர்பில் இன்னமும் தீர்மானத்தினைஎடுக்கவில்லை. அவ்வாறு தீர்மானம் எடுக்கப்படுகின்றபோது, நாம் எமது நிலைப்பாடுகளை வெளிப் படுத்துவோம் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும் கையெழுத்தானது.

இலங்கை தரப்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் தாய்லாந்திற்கான பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜக்கபொங் சங்மானி ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கானபுரிந்துணர்வு ஒப்பந்தம் இதன் பின்னர் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் மிக உயர்தர இரத்தினக்கற்கள் சர்வதேச ரீதியில் நன்கு பிரபல்யமானவை என்பதுடன் தற்போது சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில்தனித்துவமானஇடத்தைப் பிடித்துள்ள தாய்லாந்து, அந்த ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டுள்ளது.

அதன்படி, இரு நாடுகளிலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம்இரத்தினம்மற்றும் ஆபரணத் துறை தொடர்பான அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

இலங்கைஇரத்தினக்கல்ஆபரண ஆராய்ச்சிமற்றும்பயிற்சிநிறுவனத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் பி.ஜி.ஆர்.டபிள்யூ. கம்லத் மற்றும் தாய்லாந்தின்இரத்தினக்கல்ஆபரண நிறுவனப் பணிப்பாளர் சுமேத் பிரசோங்பொஞ்சாய் ஆகியோர் கைச்சாத்திட்டனர்




காலைக்கதிர் Kalaikkathir

# தும்பங்கேணியில் நிலக்கடலை விழிப்புணர்வு நிகழ்வு நடந்தது





(வி.ரி.சகாதேவராஜா)

ஊடுபயிர்ச் செய்கை மூலம் நிலக்கடலை விதை உற்பத்தி தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு திக்கோடை விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர்விவசாயதிட்டப்பிரதேசத்தில் நடைபெற்றது.

திக்கோடை விவசாய போதனாசிரியர் எஸ்.சசிகுமார்தலைமையில்நடைபெற்றநிகழ்வில்மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், உதவி விவசாய பணிப்பாளர்களான எஸ்.சித்திரவேல் திருமதி நித்தியா நவரூபன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், போரதீவுப்பற்று அக்றோ பரடைஸ் கம்பனியின் தவிசாளர், ஆலய பரிபாலன சபையினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பிரதேச விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஊடுபயிர்ச்செய்கைக்கான விதைகள் வழங்குவது தொடர்பாகவும் தற்போதைய விவசாய திட்டங்கள் தொடர்பிலும் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வாழைச்செய்கையில் ஊடுபயிராக செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலையின் அறுவடை நிகழ்வும் நடைபெற்றது.

இதன்போது விவசாயிகள் குறைகள் மற்றும் தேவைகள் கேட்டறியப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வுகள் விரைவாக பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் பிரதி விவசாய பணிப்பாளர் உறுதியளித்தார்.

(05)

# நிந்தவூர் வைத்தியாலை அபிவிருத்தி பணிகள் மிகவிரைவில் தொடங்கும்;

## பைசால் காசிம் எம்.பி. உறுதி



(ஏயெஸ் மௌலானா)

நிந்தவூர்ஆதாரவைத்தியாலையின் அபிவிருத்திப் வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் எம்.பி. உறுதியளித்துள்ளார்

வெள்ளிக்கிழமை வைத்தியசாலைக்குகளவிஜயம்மேற்கொண்ட அவர் வைத்தியசாலையின்நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பி.ஏ.வாஜித் தலைமையில்வைத்தியசாலையின்எதிர்காலஅபிவிருத்திப்பணிகள்தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்காக அரசாங்கம் மற்றும் அவற்றுக்குப் பொறுப்பான அதிகார மட்டங்களுடன் கலந்துரையாடி விரைவில் வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கீலா இஸ்ஸதீன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிரதம பொறியியளலாளர் எம்.ஹக்கீம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.ஏ. மாஹிர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். (05)

# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா துறைநீலாவணையில்



(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசெயலகம் துறைநீலாவணை கிராம பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய பிரதேச பொங்கல் விழா - 2024 நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

துறைநீலாவணை தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகள்இடம்பெற்று, ஆலயத்துக்கு அருகில்கதிரறுவடைநடைபெற்றதுடன் நெற்கதிர்கள் பிரதேச செயலக பிரிவின் அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக பண்பாட்டுபவனியாக துறைநீலாவணை கண்ணகை அம்மன்ஆலயத்துக்குகொண்டுவரப்பட்டது..

கலாசார விழுமியங்களுடன் பண்பாட்டு பவனியாக கொண்டு வரப்பட்ட நெற்கதிர்கள் கண்ணகை அம்மன்ஆலயத்தைஅடைந்ததும்சமய வழிபாடுகளுடன்பாரம்பரியமுறையில் உப்பட்டி அடித்து பொலிதூற்றப்பட்டு பின்னர் நெல் குற்றப்பட்டு பொங்கல் பானையில் புத்தரிசியிடப்பட்டு நிகழ்வுகள் இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மங்கலவிளக்கேற்றல்நிகழ்வுகளை தொடர்ந்து பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச கலைஞர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் கிராமிய நடனங்கள், பாடல்கள், கவிதைகள் மற்றும் நாடகங்கள் என்பனவற்றுடன் அனைவரது மனதிலும்களைகட்டியது பொங்கல் விழா நிகழ்வுகள்.

மேலும் அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான கோலம் போடுதல், பூ மாலை கட்டுதல் மற்றும் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் போன்ற விளையாட்டுகள் என்பன இடம்பெற்றதுடன் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் துறைநீலாவணை யுனைட்டட் விளையாட்டு கழக நிர்வாகத்தினரால் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக்கத்தினரால் அம்மன்புகழ்பாடும்இறுவட்டுஒன்றும் வெளியீட்டு வைக்கப்பட்டது. (05)

# சமூக செயற்பாடுகளைப் புறக்கணிக்கும் போக்குகள் சுதந்திரமாக பொருள்படாது

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு



நாட்டின் சுதந்திரம் முழு சமூகங்களதும் உரிமைகளுக்கு அடையாளமாகத் திகழ வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சகல சமூகங்களதும் உரிமைகளை அங்கீகரித்துத்தான் பிரித்தானியர் நாட்டுக்கு சுதந்திரம் வழங்கினர். இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க தலைவர்கள் ஜனநாயக செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இதனால், எதிர்கொண்ட இன்னல்களுக்கு சகல சமூகங்களும் முகங்கொடுக்க நேர்ந்தது. இப்படிப் பெறப்பட்ட சுதந்திரம் இன்று பாரபட்சமாக்கப்பட்டுள்ளதோ! என எண்ணத் தோன்றுமளவுக்கு அரசியல் நிலமைகள் மாறியுள்ளன.

குறித்த சமூகங்களை மாத்திரம் இலக்கு வைக்கும் அல்லது ஓரங்கட்டும் அரசியற் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டுப்பற்றிலிருந்து மக்கள் தூரமாகும் நிலைமையே ஏற்படும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச்சட்டம் என்பவை அரசியல் நோக்குகளுக்காகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. அரச விரோத செயற்பாடுகளை விமர்சிக்கும் அல்லது கண்டிக்கும் மக்களின் உரிமைகள் இந்தச் சட்டங்களால் மறுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஒரு சிலர் செய்த நாசவேலைகளுக்காககுறித்தசமூகங்களையே பழிவாங்கும் அரச செயற்பாடுகள் நடந்ததை நாம் மறப்பதற்கில்லை. பெரும்பான்மை பலத்தால்மாற்றுசமூகங்களைக்கருவறுக்கும் மனநிலைகள் அரசாங்கத்துக்கு உள்ளவரை சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடியாது.

எனவே, இந்த சுதந்திர தினத்திலாவது சகலரையும் தாய் நாட்டுப்பற்றுடன் அரவணைக்கும் செயலில் அரசாங்கம் ஈடுபட வேண்டும். -என்றுள்ளது.

(05)

# 76ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு 1,500 பொலிஸார் போக்குவரத்து கடமை

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக 1,500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனப் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பாதுகாப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக மேலும் 4,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த விசேட நடவடிக்கைகள் நேற்று சனிக்கிழமையும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் சுதந்திரதினத்தை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதினம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சனத் நிஷாந்தவின் மனைவிக்கு தேசியப் பட்டியல் எம்.பி. பதவி



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி திருமதி சமரி பெரேராவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிப்பது தொடர்பில் அந்தக் கட்சியால் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நாமல் ராஜபக்ச தலைமையிலான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஏற்கனவே கலந்துரையாடலை நடத்தியது.

குறித்த பிரேரணை கட்சியின் மத்திய குழு மற்றும் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு கட்சியின் உயர்மட்ட தலைமையின் ஆசியும் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (05)

# உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு வளத்தாப்பிட்டியில் வைத்திய சேவை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் வைத்திய சேவை சம்மாந்துறை வளத்தாப்பட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு குறித்த நடமாடும் வைத்திய சேவையை ஏற்பாடு செய்திருந்தது.



பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம். பஸால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுபாதுகாப்புபிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம்.கபீர், உதவி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி ஜீவராணி சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சையளித்ததுடன் குறித்த நோய் தொடர்பாக வைத்திய ஆலோசனைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் ஏடிரி அமைப்பினரும் பிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல். லபீர் மற்றும் ஜீ.சுகந்தன் ஆகியோரும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார பரிசோதகர்களும் கலந்துகொண்டதுடன் நிகழ்விற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜிந்துபிட்டி துப்பாக்கி சூட்டுடன் தொடர்படைய இருவர் கைது

ஜிந்துபிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவரைசுட்டுக்கொன்றசம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரும் ஆதரவாக செயற்பட்ட நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்கள் கடவத்தை மற்றும் ஆட்டுப்பட்டி தெருவைச் சேர்ந்த 28 மற்றும் 39 வயதுடையவர்களாவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆட்டுப்பட்டி தெரு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# நாடு திரும்பிய 51 பேருக்கு இலங்கைக் குடியுரிமை

வடக்கு-கிழக்கின் 7 மாவட்டங்களில் வசிக்கும் 51 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியப்பிரமான நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வந்த நிலையில் அங்கு பிறந்த பிள்ளைகளுடன் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் நாடு திரும்பிய பலர் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற முடியாது பல்வேறு நெருக்கடிக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பர் சிலோன் நிறுவனத்தின் பங்களிப்புடன் மாவட்ட செயலகம் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் என்பன இணைந்து நடமாடும் வேலைத் திட்டமாக துரிதமாக பிறப்பு சான்றிதழை வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய வடக்கு-கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 51 பேருக்கு பிரஜாவுரிமை மற்றும் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள நிலையில் அதன் ஒரு கட்டமாக இலங்கை பிரஜை என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்ட அரச அதிபரி பீ.ஏ.சரத்சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், குடிவரவு குடியகல்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் ஈ.எச்.நயனா பிரசங்க, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் டினேஸ், குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், ஒப்பர் சிலோன் அமைப்பின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05-100)

# டெங்கு அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவில் ஒழிப்பு நடவடிக்கை





வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில், வவுனியா மாவட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் இராணுவத்தினர், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பல இடங்களில் நேற்று (சனிக்கிழமை) குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், அதே நேரம் நுளம்பு பெருக்கத்திற்குச் சூழல் காணப்படும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் முகமாகச் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்கள், பாதுகாப்புத் துறையினர் விசேட கள விஜய செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

அதே நேரம் வவுனியா நகர மத்திய பகுதிகளைச் சூழ உள்ள பகுதிகள் இராணுவத்தினரின் உதவியுடன் விசேட சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டமையுடன் நகரசபையின் உதவியுடன் குப்பைகளும் அகற்றப்பட்டன.

அத்துடன் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 -100)

# சகல இன மக்களுக்கும் சம உரிமை அதுவே நிலையான சுதந்திரம்

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இன நல்லிணக்கமும் மிக முக்கிய விடயமாகும். எனவே, இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமைகளை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை மலரும் பட்சத்திலேயே நிலையான சுதந்திரமும் பிறக்கும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம். அதற்கான சிறந்த களமாக சுதந்திர தினம் அமையட்டும்.

-என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸன் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

பல்லின சமூகங்களும் வாழும் இலங்கைத்திருநாடு சுதந்திரம் அடைந்து இன்றோடு 76 ஆண்டுகளாகின்றன. இந்த உன்னதமான நாளை இலங்கையர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டுக்கே உரித்தான பாரம்பரிய நடைமுறைகளுடன் கொண்டாடுவோம். சுதந்திரம் என்பது தனக்கு மட்டும் அல்ல தன்னை சூழ உள்ளவர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயற்படுவோம்.

நாடு சுதந்திரம் அடைந்தாலும் எமது மலையகப் பெருந்தோட்ட மக்கள் அரசியல், பொருளாதாரம், சமூக ரீதியிலான பிரச்சினைகளில் இருந்து இன்னும் விடுதலையாகவில்லை. எனவேதான் எமது மக்களையும் தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்கவைப்பதற்காக எல்லாவிதமான நடவடிக்கைகளையும், நகர்வுகளையும் முன்னெடுத்து வருகின்றோம். லயன் யுகத்தில் இருந்து விடுபட வேண்டுமெனில் காணி உரிமை அவசியம், அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பல்லின சமூகமும் வாழும் இலங்கையில் இன நல்லிணக்கம், ஐக்கியம் என்பது மிக முக்கியம். இலங்கையில் நீடித்த அமைதி, நிலையான அபிவிருத்தி என்பன இன நல்லிணக்கத்திலேயே தங்கியுள்ளன. எனவே, இன நல்லிணக்கத்துக்காகவும் நாம் கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

-என்றுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2024இல் வெளியிடப்பெற்றது.